RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22238

OPEN ACCESS

# இமையம் சிறுகதைகளில் சிறுதெய்வ வழிபாடு

பா நித்ய பிரிய மீனா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, திருச்சி-620022, தமிழ்நாடு, இந்தியா

# Worship of a Minor Deity in the Short Stories of Imayam

P. Nithya Priya Menna [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Tiruchirappalli-620022, Tamil Nadu, India

* Corresponding Author: nithyapackiyaraj@gmail.com

Received: 26.09.2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

V. Annamalai is the original birth name of Imayam. He was born in Cuddalore district. His short stories are about the marginal people and the deities they worship. Primitive people started worshiping natural changes and outrages. Thus many cults arose. Among them, the worship of minor deities is practiced since ancient period. Minor deities are worshiped by people marginal people in the society. Imaiyam has written short stories based on the character of minor deities, method of worship, location, armies, etc. In his short stories he has described about deities like Ponnaruvi Sami, Muneeswaran Sami, Sembayanar, Karupaiya and Kulla Karupu. This article is about the worship of these idols.

**Keywords:** Imayam, worship, marginal people, deities, Ponnaruvi Sami

## முன்னுரை

சிறுதெய்வ வழிபாடு என்பது பெரும்பாலும் கிராமப்புற மக்களிடம் காணப்படும். கிராமங்களில் ஆதிக்க வர்க்கத்தால் கொலை செய்யப்பட்ட ஆண், பெண் ஆகியோரை தெய்வங்களாக வழிபடும் முறை இருந்துள்ளது. மேலும் ஊரின் நன்மைக்காக உயிரை மாய்த்துக் கொண்டவர்கள், விபத்தில் மரணம் அடைந்தவர்கள், முன்னோர்கள் என்ற அடிப்படையில் மக்கள் சிறுதெய்வங்களாக வழிபடுகின்றனர். நாட்டுப்புற தெய்வங்களை துளசி இராமசாமி என்பவர், ஊர்த்தெய்வம், குலத்தெய்வம், இனத்தெய்வம், மாலைத்தெய்வம், சமாதிதெய்வம் என்று ஐந்து வகையாக கூறுகின்றார்.

## பெண் சிறுதெய்வ வழிபாடு

பெண்களின் பெயரில் உள்ள பல தெய்வங்கள் கொலை செய்யப்பட்டவர்களாக உள்ளனர். திருமணம் ஆகாமல் இறந்த பெண்களை கன்னி தெய்வம் என்று வணங்குகின்றனர். கருவுற்று இறந்த பெண்களை அம்மன், தாய் என்ற பெயர்களின் அடிப்படையில் வழிபடுகின்றனர்.

### பொன்னருவி சாமி

இமையம் தனது சிறுகதைகளில் சிறுதெய்வங்கள் பற்றி கூறியுள்ளார். 2008 - ஆம் ஆண்டு வெளிவந்த “வீடியோ மாரியம்மன்” என்ற சிறுகதைத் தொகுப்பில் “சத்தியக்கட்டு” என்ற சிறுகதை இடம் பெற்றுள்ளது. இக்கதையில் காலனிக்கார பெண் ஒருத்தி குடித்தெரு ஆணின் கருவினை சுமப்பதாக

இடம்பெற்றுள்ளது. அப்பெண் கருவை சுமப்பதை அறிந்த ஊர் மக்கள் திருமணம் செய்து வைப்பதாகக் கூறி தனியாக அழைத்துச் சென்று கொலை செய்வதாக ஆசிரியர் படைத்துள்ளார். அந்த பெண்ணின் உடலை குடித் தெருக்காரர்கள் பயன்படுத்தும் குளத்தில் போட்டுவிடுகின்றனர். அப்பெண்ணின் இறப்பிற்குப் பின் ஊரில் நிகழும் துக்க நிகழ்வுகளுக்குக் காரணம் அப்பெண் தான் என்று கருதி வழிபட தொடங்குகின்றனர். மக்களின் நம்பிக்கையில் தான் இத்தகைய சிறு தெய்வங்கள் உருவாகின்றனர். இதனை,

"சாமிதான் பெருசு."

"அப்பிடின்னா இன்னிக்கி மய வரும்"

"எப்படிச் சொல்ற?"

"நம்புனாத்தான் சாமி நம்பாட்டி உமிதான்" (Imayam, 2018)

என்ற இமையம் கதைகளின் உரையாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும் பொன்னருவி சாமிக்கு இருபது வருடங்களாக பொங்கல் வைத்து வழிபட்டு வருகின்றனர். இதனால் வருடம் தவறாமல் மழை பெறுவதாக படைக்கப்பட்டுள்ளது. மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதமாக "சத்தியக்கட்டு" என்ற சிறுகதை அமைந்துள்ளது.

## ஆண் சிறுதெய்வ வழிபாடு

சிறுதெய்வங்களில் ஆண்களையும் வழிபடும் முறை உள்ளது. போரில் மரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் வைத்து வழிபட்டனர். நடுகல் வழிபாடு பற்றி சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த நடுகல் வழிபாடு பிற்காலகட்டங்களில் சிறு தெய்வ வழிபாடக மாறியுள்ளது. ஆண் சிறு தெய்வங்கள் பெரும்பாலும் எல்லைத் தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் வழிபடப்படுகின்றனர். மேலும் இத்தெய்வங்களை சினம் நிறைந்த தெய்வங்களாக மக்கள் வணங்குகின்றனர்.

## முனீஸ்வரன் சாமி

முனி என்ற பெயரில் அறியப்படும் தெய்வம்தான் முனீஸ்வரன் என்பதாகும். இந்த முனியைப் பற்றி பல செய்திகள் இன்றளவிலும் கிராமப்புறங்களில் பேசப்பட்டு வருகிறது. இமையம் எழுதிய "கொலைச் சேவல்" என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள "அன்னக்கிளியும் பன்றிக்கறியும்" என்ற சிறுகதையில் முனீஸ்வரன் சாமி பற்றிய செய்திகள் உள்ளது. இதில் பாட்டிக்கும் பேரனுக்கும்மான உரையாடல் இடம் பெற்றுள்ளது.

"இருக்கிறதிலியே ஆலடிதான் பெரிய ஊரு ரெண்டாயிரம் தலக்கட்டு. அந்த ஊருல முனீஸ்வரன்னு ஒரு சாமி இருக்கு. பொல்லாத சாமிடா" (Imayam, 2019)

என்று முனீஸ்வரன் சாமி பற்றி பாட்டி தனது பேரனிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இக்கதையின் மூலம் முனீஸ்வரன் சாமி, ஊரினை தீமைகளிலிருந்து காக்கும் தெய்வமாக உள்ளது என்று அறியமுடிகின்றது.

## செம்பையனார்

அய்யனார் என்ற சாமியை பல கிராமங்களில் காவல் தெய்வமாக வழிபடுகின்றனர். பொதுவாக இத்தகைய தெய்வங்கள் ஊரின் எல்லையில் அல்லது காட்டுக்குள்தான் அமைந்திருக்கும். அந்த கோவிலைச் சுற்றி அமைந்துள்ள ஊர்களில் உள்ள மக்கள் திருவிழாவின் போது ஆடு, கோழி போன்றவற்றை பலியிடும் வழக்கமும் உள்ளது. இமையம் அவர்கள் எழுதியுள்ள சிறுகதையில் செம்பையனார் தெய்வத்தின் வழிபாடு பற்றி எழுதியுள்ளார். செம்பையனார் சாமியைப் பார்த்தால் பயம் ஏற்படும் என்று சிறுகதையில் படைக்கப்பட்டுள்ளது. செம்பையனாரிடம் வேண்டிக் கொள்ளுவது

நிச்சயமாக நடக்கும் என்று மக்கள் நம்புவதாக இக்கதை அமைந்துள்ளது. அதனை வெளிப்படுத்தும் வகையில் 'அன்னைக்கிளியும் பன்றிக் கறியும்' என்ற சிறுகதையில் பாட்டியின் உரையாடல் உள்ளது.

"கேட்ட வரத்தக் கொடுக்கிறவன்தான்

செம்பையனாரு. அவன் மேல

சீட்டுக்கட்டப் போறன். அதுக்கு

உத்தரவு கேக்கத்தான் வந்தன். இது

காவு அறுக்குற சாமிடா." (Imayam, 2019)

என்ற உரையாடல் மூலம் அவர்களின் நம்பிக்கையை அறிய முடிகிறது. மேலும் இத்தகைய காவல் தெய்வங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் திருவிழாக்கள் நடத்தப்படுகிறது.

## கருப்பையா

கருப்பசாமி என்ற பெயரிலும் தமிழகத்தில் காவல் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இமையம் அவர்களின் 'கொலைச்சேவல்' என்ற சிறுகதையில் முத்தாண்டி குப்பத்துக் கருப்பையா கோவில் பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது. முத்தாண்டி குப்பம் என்பது கடலூரில் உள்ள சிற்றூர் ஆகும். அவ்வூரில் கோவில் அமைந்துள்ளதால் முத்தாண்டி குப்பத்துக் கருப்பையா என்று பெயர் பெற்றுள்ளது. இத்தெய்வத்தினை வழிப்பட்டு கொலைச் சேவல் குத்தினால் அந்த உயிரினம் துன்பப்பட்டு இறப்பது போல நம்முடைய எதிரியும் அழிந்துவிடுவர் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்துள்ளது. இந்த நம்பிக்கையை கதைமாந்தர்களின் உரையாடல்கள் மூலம் அறியலாம். கொலைச்சேவல் குத்த வந்த பெண்ணும் பூசாரியும் உரையாடும் நிகழ்வில்,

"கொலச்சேவ குத்திடுங்க"

"ஒம் மவ கதி?"

"பெத்த தாயா அவளுக்கு இதத்தான் நான் செய்யனும் சாமி"

"ரெண்டு பேருக்குமா?"

"ஆமாம்." (Imayam, 2019)

என்பது போல அமைந்துள்ளது. இக்கதையில் தன்னை ஏமாற்றிய ஆணிற்கும், தனது சொல் கேட்காத மகளுக்கும் கொலைச்சேவல் கொடுப்பதாக இக்கதை அமைந்துள்ளது.

## குள்ளக் கருப்பு

கருப்புசாமியை வெவ்வேறு பெயர்களில் பல ஊர்களில் வழிபடுகின்றனர். இமையத்தின் "மண்பாரம்" என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள "பொன்னம்மாவின் குடும்பக் கதை" என்ற சிறுகதையில் கருப்புசாமி குறித்த செய்திகள் உள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்றார் போல் சிறுதெய்வங்களும் அதற்குரிய வழிபாட்டு முறைகளும் மாறுபடும் என்று அறியப்படுகிறது. மேலும் ஒரே இடத்தில் அய்யனார், சின்ன கருப்பு, பெரிய கருப்பு, சங்கிலிக் கருப்பு, கருப்பையா என்று பல தெய்வங்கள் இருப்பதை இக்கதை வெளிப்படுத்துகிறது.

"குள்ளக் கருப்புக்குத்தாங்க ஆடு, கோயி, பன்னின்னு வேணும்.

கருவாரு, சுருட்டு, சாராயமெல்லாம் அவனுக்குதாங்க" (Imayam, 2015)

என்று, கதைமாந்தர்கள் உரையாடுகின்றனர். இதிலிருந்து சிறுதெய்வங்களுக்கு படைக்கப்படும் உணவினை அறிய முடிகின்றது.

## முடிவுரை

சிறுதெய்வங்கள் என்பது மக்கள் வாழும் ஊரின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகிறது. இத்தெய்வங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் திருவிழா நடத்தப்பட்டு படையல்கள் படைத்து வழிபடுகின்றனர். இதனால் ஊரில் தீமை விலகி நன்மை உண்டாகும் என்று மக்கள் இன்று வரையிலும் நம்புகின்றனர். பல குடும்பங்களில் குலதெய்வமாக வணங்கப்படுவதும் சிறுதெய்வங்களே ஆகும். ஒவ்வொரு சிறுதெய்வத்திற்கும் வழிபாட்டு முறைகள் மாறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## References

Imayam, (2015) Manbaaram, Crea Publication, Chennai, India

Imayam, (2018) Video Mariyamman, Crea Publication, Chennai, India

Imayam, (2019) Kolai Seval, Crea Publication, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License